[2021] 6 S.C.R. 87

இந்திய உச்ச நீதிமன்றம்

சகுந்தலா சுக்லா

எதிர்

உத்தரப் பிரதேச மாநிலம் மற்றும் ஒருவர்

(குற்றவியல் மேல்முறையீடு எண் 876 / 2021)

செப்டம்பர் 07, 2021

முன்னிலை

(மாண்புமிகு நீதியரசர் முனைவர் தனஞ்சய ஒய்.

மாண்புமிகு நீதியரசர் திரு.சந்திரசூட்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு.எம்.ஆர்.ஷா)

பிணை – கொலை வழக்கு – குற்றம் சாட்டப்பட்டவரின் தண்டனை– தனிமுறைப்பட்ட எதிர்மேல்முறையீட்டாளருக்கு ஆயுள் தண்டனை – மேல்முறையீடுகள் – மேல்முறையீடு நிலுவையில் இருக்கும் உயர் நீதிமன்றத்தால் பிணை வழங்கல் – இறந்தவரின் மனைவியால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது – தீர்ப்பு: மேல்முறையீடு

நிலுவையில் இருப்பதால் குற்றம் சாட்டப்பட்டவரை பிணையில் விடுவித்த உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பு / உத்தரவின் எந்தப் பகுதி சமர்ப்பிப்புகள் என்று கூறலாம், எந்தப் பகுதியை கண்டுபிடிப்புகள்/ காரணங்கள் என்று கூறலாம் என்பதில் முழுமையான தெளிவு இல்லை – இது அரசு வழக்கறிஞர் சார்பாக வைக்கப்பட்ட சமர்ப்பிப்புகள் கூட பிரதிபலிக்கவில்லை – பிணை மேல்முறையீடு நிலுவையில் இருப்பதை எதிர்த்து மாநில அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட விரிவான எதிர் ஆணையுறுதி ஆவணம் உயர்நீதிமன்றத்தால் குறிப்பிடப்படவில்லை – குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 389–ன் கீழ் மனுவை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்த விதம் மற்றும் பிணை மனு நிலுவையில் உள்ள மேல்முறையீட்டை அங்கீகரிக்க முடியாது – தகுதிப்பாட்டின் அடிப்படையிலும் கூட, உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு நிலைக்கத்தக்கதல்ல – உயர்நீதிமன்றம் ஆரம்பத்திலிருந்தே விசாரணையைத் தாமதப்படுத்த / தடம் புரளச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட சூழ்நிலைகளைக் கவனிக்கத் தவறியது – குற்றத்தின் தீவிரத்தன்மையையும், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளின் தீவிரத்தையும், அவர்களின் நடத்தையின் வாயிலாக விசாரணைக்கு முன்பும் பின்பும் சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தியதை உயர் நீதிமன்றம் கருத தவறியது – குற்றம் சாட்டப்பட்டவர்கள்– தனிமுறைப்பட்ட எதிர்மேல்முறையீட்டாளர்கள் விசாரணை நீதிமன்றம் விதித்த தண்டனையை அனுபவிக்க உடனடியாக சரணடைய வேண்டும் –

நிலுவையில் உள்ள மேல்முறையீடுகளை தகுதிப்பாட்டின் அடிப்படையில் உயர் நீதிமன்றம் முடிவு செய்யும் – குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 – பிரிவு.389 – இந்திய தண்டனைச் சட்டம், 1860 – பிரிவுகள். 302/ 149, 201 உ/இ பிரிவு.120B.

தீர்ப்புகள் / உத்தரவுகள் – ஒரு தீர்ப்பின் முக்கியத்துவம் மற்றும் நோக்கம் – ஒரு முடிவு துல்லியமாக இருந்தால் மட்டும் போதாது, அது நியாயமானதாகவும், தர்க்கரீதியானதாகவும், எளிதில் புரிந்துகொள்ளக்கூடியதாகவும் இருக்க வேண்டும் – நீதிமன்றம் என்ன சொல்கிறது, எப்படி சொல்கிறது என்பதும் நீதிமன்றம் என்ன முடிவு செய்கிறது என்பது போலவே முக்கியமானது –பொருண்மை மற்றும் சட்டம், சமர்ப்பிப்புகள், கண்டுபிடிப்புகள், காரணங்கள் மற்றும் வழங்கப்பட்ட இறுதி நிவாரணம் ஆகிய இரண்டின் மீதும் தீர்ப்பில் தெளிவு இருப்பது விரும்பத்தக்கது.

நீதிமன்றம் மேல்முறையீட்டு மனுவை அனுமதித்து, தீர்ப்பளித்ததாவது;–

1. மேல்முறையீடு நிலுவையில் இருப்பதால் குற்றம் சாட்டப்பட்டவர்களை பிணையில் விடுவித்து உயர்நீதிமன்றம் பிறப்பித்த எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பு மற்றும் உத்தரவில் எந்தப்

பகுதியை சமர்ப்பிப்புகள் என்று சொல்லலாம், எந்தப் பகுதியை கண்டுபிடிப்புகள் / காரணங்கள் என்று சொல்லலாம் என்பதில் முழுமையான தெளிவு இல்லை. மேல்முறையீடு நிலுவையில் இருப்பதால் பிணை வழங்குவதை எதிர்த்து அரசு வழக்கறிஞர் தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதங்களை கூட இது பிரதிபலிக்கவில்லை. மாநில அரசு சார்பில் பிணை நிலுவையில் உள்ள மேல்முறையீட்டு மனுவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட எதிர் ஆணையுறுதி ஆவணத்தை கூட உயர் நீதிமன்றத்தின் பரிசீலிக்கவில்லை. குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 389-ன் கீழ் உயர்நீதிமன்றம் மனுவை தள்ளுபடி செய்த விதம், மேல்முறையீடு நிலுவையில் உள்ள பிணை மனுவை தள்ளுபடி செய்த விதத்தை ஏற்க முடியாது. [பாரா 9.1] [97-E-F]

2. தீர்ப்பின் முக்கியத்துவம்; தீர்ப்பின் நோக்கம் மற்றும் தீர்ப்பில் என்ன இருக்க வேண்டும்.

2.1. "தீர்ப்பு" என்பது வழக்கின் கதையைச் சொல்லும் நீதித்துறை கருத்து; வழக்கு எதைப் பற்றியது; நீதிமன்றம் வழக்கை எவ்வாறு தீர்க்கிறது. "தீர்ப்பு" என்பது ஒரு கேள்வி அல்லது கேள்விகளின் மீது நீதிமன்றத்தால் வழங்கப்படும் எந்தவொரு முடிவாகவும் வரையறுக்கப்படுகிறது அல்லது நீதிமன்றத்தில் ஒரு வழக்கை முறையாக நடத்துவதற்கு தரப்பினர்களுக்கிடையேயான

பிரச்சினைக்கு சட்ட நடவடிக்கையில் ஒரு நீதிமன்றத்தின் முடிவு அல்லது தண்டனை என வரையறுக்கப்படுகிறது, இது ஒரு நீதிபதியின் பகுத்தறிவுடன் அவரை தனது முடிவுக்கு இட்டுச் செல்கிறது. "தீர்ப்பு" என்ற சொல் நீதித்துறை கருத்து அல்லது முடிவு என தளர்வாக பயன்படுத்தப்படுகிறது. எந்தவொரு எழுதப்பட்ட தீர்ப்புக்கும் நான்கு நோக்கங்கள் உள்ளன: 1) நீதிபதிகளின் சொந்த எண்ணங்களை உச்சரிப்பது; ii) தரப்பினர்களுக்கு முடிவை விளக்குவது; iii) முடிவுக்கான காரணங்களை பொதுமக்களுக்குத் தெரிவிப்பது; மற்றும் iv) மேல்முறையீட்டு நீதிமன்றம் பரிசீலிப்பதற்கான காரணங்களை வழங்குதல்.

2.2. ஒரு முடிவு துல்லியமாக இருந்தால் மட்டும் போதாது, மேலும் நியாயமான, தர்க்கரீதியான மற்றும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும். நீதித்துறையின் கருத்து தெளிவுபடுத்தும் வகையில் எழுதப்பட வேண்டும். நீதிமன்றம் என்ன சொல்கிறது, எப்படி சொல்கிறது என்பதும் நீதிமன்றம் என்ன முடிவு செய்கிறது என்பதும் முக்கியம். ஒவ்வொரு தீர்ப்பும்நான்கு அடிப்படை கூறுகளை உள்ளடக்கியது, அவை (i) கூற்றுப்பொருள் (தொடர்புடைய) உண்மைகள், (ii) சட்ட சிக்கல்கள் அல்லது கேள்விகள், (iii)ஒரு முடிவை எட்டுவதற்கான விவாதம் மற்றும் (iv)விகிதம் அல்லது முடிவான முடிவு. ஒரு தீர்ப்பு ஒத்திசைவானதாகவும், முறையாகவும், தர்க்கரீதியாகவும்

ஒழுங்கமைக்கப்பட்டதாக இருக்க வேண்டும். அது சட்டக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஒரு வாசகனுக்கு தர்க்கரீதியான உண்மையைக் கண்டறிய உதவ வேண்டும். தீர்ப்பு ஆனது பொருண்மையின் முடிவினை வரையறை செய்ய வேண்டும் மற்றும் அது தொடர்புடைய சட்ட கோட்டபாடுகளை முடிவு செய்து அவற்றை பொருண்மையுடன் பொருத்தி பார்க்க வேண்டும். ஒரு தீர்ப்பின் முக்கிய கூறுகள்: i) தலைப்பு, ii) வழக்கு எண் மற்றும் மேற்கோள், iii) உண்மைகள் iv) சிக்கல்கள், v) இரு தரப்பினரின் வாதங்களின் சுருக்கம், vi) சட்டத்தின் பயன்பாடு, vii) இறுதி முடிவான தீர்ப்பு.

2.3. தீர்ப்பு நீதிபதியின் தனித்துவத்தை பிரதிபலிக்கிறது, எனவே அதை கவனமாக எழுதுவது இன்றியமையாதது. தீர்ப்பில் உள்ள நியாயம் புரிந்துகொள்ளக்கூடியதாகவும் தர்க்கரீதியானதாகவும் இருக்க வேண்டும். அது தெளிவும், துல்லியமும் குறிக்கோளாக இருக்க வேண்டும். அனைத்து முடிவுகளும் இருக்க வேண்டும். தீர்ப்பு முறையாக பதிவு செய்யப்பட்ட காரணங்களால் ஆதரிக்கப்படுகிறது. கண்டுபிடிப்புகள் மற்றும் வழிமுறைகள் துல்லியமாகவும் குறிப்பிட்டதாகவும் இருக்க வேண்டும். தீர்ப்புகளை எழுதுவது ஒரு கலை, இருப்பினும் இது சட்டத்தையும் தர்க்கத்தையும் திறமையாகப் பயன்படுத்துவதை உள்ளடக்கியது. நிலுவையில் உள்ள வழக்குகள் மற்றும் நிலுவைத் தொகைகளால் நீதிபதிகளுக்கு அதிக சுமை ஏற்படக்கூடும் என்ற உண்மையை நாங்கள் அறிவோம். ஆனால்

அதே நேரத்தில், தரத்தை ஒருபோதும் அளவுக்காக தியாகம் செய்ய முடியாது. ஒரு தீர்ப்பு துல்லியமான முறையில் இல்லை என்றால், அது ஒரு பரந்த தாக்கத்தை ஏற்படுத்தாது. தெளிவின்மையால் சில தீர்ப்புகள் இறுதியில் நிராகரிக்கப்படுகின்றன. எனவே, ஒரு தீர்ப்பு எழுதப்படும்போதெல்லாம், அது உண்மைகள் குறித்த தெளிவைக் கொண்டிருக்க வேண்டும்; எதிர்தரப்பினர்கள் சார்பில் முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்கள் மீதும்; விதிகள் பற்றிய விவாதம் மற்றும் அதன் பிறகு பகுத்தறிவு மற்றும் அதன் பிறகு இறுதி முடிவு மற்றும் கண்டுபிடிப்புகள் மற்றும் அதன் பிறகு செயல்பாட்டு பகுதி, உத்தரவு. வழங்கப்பட்ட இறுதி நிவாரணம் குறித்து தெளிவு இருக்க வேண்டும். இறுதி நிவாரணமாக தனக்கு உண்மையில் என்ன கிடைத்தது என்பதை வழக்கில் உள்ள ஒரு தரப்பினர் அறிந்திருக்க வேண்டும். மேற்கூறிய அம்சங்களை எழுதும் போது மனதில் கொள்ள வேண்டும். இந்த தீர்ப்பு மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் சுமையை குறைக்கும். உண்மைகள் பற்றிய தெளிவு இல்லாத பல தீர்ப்புகளை நாம் கண்டிருக்கிறோம். பல நேரங்களில் கற்றறிந்த நீதிபதி பகுத்தறிவு மற்றும் கண்டுபிடிப்புகள் மூலம் தீர்ப்பில் என்ன தெரிவிக்க விரும்புகிறார் என்பதைப் புரிந்துகொள்வது மிகவும் கடினம், இதன் காரணமாக, விஷயங்கள் புதிய பரிசீலனைக்கு அனுப்பப்பட வேண்டும். எனவே, தீர்ப்பு என்பது உண்மைகள் மற்றும் சட்டம் ஆகிய இரண்டில் சமர்ப்பிப்புகள், கண்டுபிடிப்புகள், காரணங்கள் மற்றும் வழங்கப்பட்ட இறுதி நிவாரணம் ஆகியவற்றில் தெளிவு இருக்க வேண்டும்.

3.1 தகுதிப்பாட்டின் அடிப்படையிலும் கூட, மேல்முறையீடு நிலுவையில் உள்ள குற்றவாளிகளை பிணையில் விடுவித்து உயர்நீதிமன்றம் பிறப்பித்த எதிர்ப்புக்குள்ளான உத்தரவு ஏற்கத்தக்கதல்ல. கற்றறிந்த விசாரணை நீதிமன்றம், சாட்சியங்களைப் பரிசீலித்து, குற்றம் சாட்டப்பட்டவர்களை இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 302/149, 201 உ/இ 120B ஆகியவற்றின் கீழ் குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்துள்ளது என்ற உண்மையை உயர்நீதிமன்றம் சிறிதும் சீர்தூக்கி மற்றும் கருத்தில் கொள்ளவில்லை. கற்றறிந்த விசாரணை நீதிமன்றத்தால் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டவுடன், அதன் பிறகு நிரபராதி என்று எந்த அனுமானமும் இருக்காது. எனவே, அந்த இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 302/149, 201 உ/இ 120B ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய கடுமையான குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு மேல்முறையீடு நிலுவையில் உள்ள குற்றவாளிகளுக்கு பிணை வழங்குவதில் உயர் நீதிமன்றம் மிகவும் மெதுவாக இருக்கும்.

3.2. ஆரம்பத்திலிருந்தே விசாரணையைத் தாமதப்படுத்த / தடம் புரளச் செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை உயர்நீதிமன்றமும் கவனிக்கத் தவறிவிட்டது. விசாரணை நிலுவையில் உள்ள நிலையிலும், விசாரணையின் போதும் கூட குற்றம் சாட்டப்பட்டவர்களின் நடத்தையை உயர் நீதிமன்றம்

பரிசீலிக்கவில்லை. குற்றம் சாட்டப்பட்டவர்கள் அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் கிராம மக்களை பலமுறை மிரட்டியதாகவும், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சாட்சியம் அளித்தால் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று மிரட்டியதாகவும் அரசு தரப்பு சாட்சியத்தை பரிசீலிக்கும் போது விசாரணை நீதிமன்றம் குறிப்பாக உணர்ந்தது. உயர்நீதிமன்றமும் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 504 மற்றும் 506 இன் கீழ் புகார்தாரர் தரப்புக்கும் மற்றவர்களுக்கும் மிரட்டல் விடுத்தல் குற்றங்களுக்காக விசாரணையின் போது தாக்கல் செய்யப்பட்ட இரண்டு முதல் தகவல் அறிக்கைகளை தீவிரமாக பரிசீலிக்கவில்லை. குற்றத்தின் தீவிரத்தன்மையையும், குற்றம் சாட்டப்பட்டவர் மற்றும் அவர்களின் மீதான குற்றச்சாட்டின் தீவிரத்தையும் விசாரணையின் போதும் அதற்குப் பிறகும் சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் விடுத்த நடத்தையையம் உயர் நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லை

3.3. விசாரணை நீதிமன்றம் விதித்த தண்டனையை அனுபவிக்க தனிமுறைப்பட்ட எதிர்மேல்முறையீட்டாளர்கள் உடனடியாக சரணடைய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. நிலுவையில் உள்ள மேல்முறையீடுகளை உயர் நீதிமன்றம் தாங்களாகவே முடிவு செய்யும்.

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : குற்றவியல் மேல்முறையீடு எண்.876/2021.

அலகாபாத் நீதிமன்றம், 08.10.2018 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவிலிருந்து குற்றவியல் மேல்முறையீட்டு எண் 1283/2018 ல் எழுகிறது.

உடன் ஒரு

குற்றவியல் மேல்முறையீட்டு எண்கள். 878, 877 மற்றும் 879 of 2021.

மேல்முறையீட்டாளருக்காக வி.கே. மிஸ்ரா, ஷகுன் ராய், புவன் ராஜ், ஆகிய வழக்கறிஞர்கள் முன்னிலையானார்கள்.

எதிர்மேல்முறையீட்டாளருக்காக சிருஷ்டி சிங், பூனம் ஆனந்த், சந்தீப் நரேன், தி/ள் எஸ் நரேன் & கோ., உதயதித்யா பானர்ஜிக்காக எச்.என்.வசிஷ்ட், பருல் சுக்லா, ஆகிய வழக்கறிஞர்கள் முன்னிலையானார்கள்.

நீதிமன்றத்தின் தீர்ப்பானது மாண்புமிகு நீதியரசர் திரு.எம்.ஆர்.ஷா, அவர்களால் பகரப்பட்டது

1. 08.10.2018 மற்றும் 06.12.2018 தேதியிட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பு (கள்) மற்றும் உத்தரவு(கள்) மற்றும் குற்றவியல் மேல்முறையீட்டு எண் 1283/2018, 1405/2018, 1496/2018 மற்றும் 1398/2018 ஆகிய வழக்குகளில் அலகாபாத் உயர் நீதிமன்றம், தனிமுறைப்பட்ட எதிர்மேல்முறையீட்டாளர்களை – குற்றம் சாட்டப்பட்டவர்களை பிணையில் விடுவித்துள்ளதால், மன உளைச்சலும் அதிருப்தியும் அடைந்த மேற்கூறிய குற்றவியல் மேல்முறையீட்டு அசல் புகார்தாரர் – இறந்தவரின் (பாதிக்கப்பட்டவர்) விதவை தற்போதைய மேல்முறையீட்டை விரும்பியுள்ளார்.

2. குற்றவியல் மேல்முறையீட்டு எண் 1283 /2018 இல் 08.10.2018 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவு, முக்கிய குற்றவாளியான சுவாமிநாத் யாதவ் வந்த வரிசையில் முதல் உத்தரவு என்பதை முதலில் கவனத்தில் கொண்டு பிணையில் விடுவிக்கப்பட்டார், மற்ற குற்றம் சாட்டப்பட்டவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் குற்றவியல் மேல்முறையீட்டு எண் 1283/2018 (சுவாமிநாத் யாதவ் வழக்கில்) சமநிலை மற்றும் உத்தரவின் அடிப்படையில் பிணையில் விடுவிக்கப்படுகிறார்கள். எனவே, குற்றவியல் மேல்முறையீட்டு எண். 1283/2018 இல் உயர்

நீதிமன்றம் வழங்கிய எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பு மற்றும் உத்தரவிலிருந்து எழும் குற்றவியல் மேல்முறையீடு எண் 876/2021 ஒரு முன்னணி மேல்முறையீடாக கருதப்படுகிறது.

2.1. இங்கு குற்றஞ்சாட்டப்பட்ட அனைத்து தனிமுறைப்பட்ட எதிர்மேல்முறையீட்டாளர்களும் – குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பிரிவு 302/149, 201 உ/இ பிரிவு 120B இந்திய தண்டனை சட்டம் வழக்கு குற்ற எண் 103/96, பன்ஸ்டீஹ், மாவட்டம், பல்லியா மாவட்டத்தின் கீழ் எழும் குற்றங்களுக்காக கற்றறிந்த விசாரணை நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டுள்ளனர் மற்றும் அவர்களுக்கு கற்றறிந்த கூடுதல் அமர்வு நீதிபதி ஆயுள் தண்டனை விதிக்கிறார். கற்றறிந்த கூடுதல் அமர்வு நீதிபதி, நீதிமன்றம் எண் 2, பல்லியா 08.02.2018 தேதியிட்ட தீர்ப்பு (கள்) மற்றும் உத்தரவு (கள்) 09.02.2018 அமர்வு விசாரணை எண் 230/1999 (மாநில எதிர் விக்ரம யாதவ் மற்றும் பிறர்) இல் நிறைவேற்றப்பட்டது.

சுருக்கமாக உண்மைகள்

3. பஜ்ரங் சுக்லா என்கிற கிருபா சங்கர் சுக்லா என்பவரின் சடலம் 28.10.1995 அன்று காலை 10:00 மணிக்கு சந்திரமணி பாண்டே என்பவரின் கிணற்றில் கிடந்தார். பல்லியா மாவட்டம் பன்ஸ்டீஹ் காவல் நிலையத்தில் ஒரு விண்ணப்பம் அனுப்புப்பட்டது;

15.11.1995 அன்று காவல்துறை தரப்பு விசாரணை அறிக்கையைத் தயாரித்தது, ஆனால் பன்ஸ்டீஹ், பல்லியா மாவட்ட காவல் நிலைய காவல்துறை அதிகாரியால் முறையான விசாரணை மேற்கொள்ளப்படவில்லை. சில கிராமவாசிகள் மேதகு ஆளுநருக்கு, இந்த வழக்கை பாரபட்சமின்றி விசாரிக்க விண்ணப்பத்தை அனுப்பினர்; 13.12.1995 அன்று இதில் மேல்முறையீட்டாளர் – சகுந்தலா சுக்லா (இறந்தவரின் மனைவி), தான் கிருபா சங்கர் சுக்லா (இறந்தவர்) அவர்களின் விதவை மனைவி என்பதையும், அவரது கணவர் 26.10.1995 அன்று இரவு அவர் பன்ஸ்டியிலிருந்து தனது கிராமமான அதார் திரும்பி வரும்போது கொலை செய்யப்பட்டார், பின்னர் குழப்பத்தை உருவாக்க இறந்த உடலை கிணற்றில் வீசினர் என்பதையும் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் முன்னிலையில் ஒரு விண்ணப்பம் அளித்தார். மேல்முறையீட்டாளரின் மேற்கண்ட விண்ணப்பத்தின் பேரில், லக்னோ அரசின் உள்துறை அமைச்சகத்தின் சிறப்புச் செயலாளர், இந்த விஷயத்தை சிபி–சிஐடி விசாரிக்க உத்தரவிட்டார்; விசாரணையின் போது, தனிமுறைப்பட்ட எதிர்மேல்முறையீட்டாளர்கள் – குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பெயர்கள் வெளிச்சத்திற்கு வந்தனர். இதில்; அந்த சி.பி.சி.ஐ.டி. யால் குற்றஞ்சாட்டப்பட்ட சுவாமிநாத் யாதவ் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இந்திய தண்டனை சட்டம் 147, 149, 302, 201, 218, 120 பி பிரிவுகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்டார்கள்; கற்றறிந்த

விசாரணை நீதிமன்றம் இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 302/149, 201, 120 பி ஆகியவற்றின் கீழ் குற்றச்சாட்டை வனைந்தது.

3.1 இந்த கட்டத்தில், குற்றப்பிரிவின் விசாரணையின் போது, திரு ஜெய்நாத் யாதவ், அப்போதைய பல்லியா மாவட்ட காவல் நிலைய துணை ஆய்வாளர், காவல் நிலைய அதிகாரியின் உத்தரவின் பேரில், இறந்த கிருபா சங்கர் சுக்லாவின் மரண சம்பவத்தை விசாரித்து, 23.12.1995 தேதியிட்ட அவரது விசாரணை அறிக்கையில், குற்றம் சாட்டப்பட்டவர்களை வேண்டுமென்றே காப்பாற்றுவதற்காக, கிருபா சங்கர் சுக்லா குடிபோதையில் தனது காதலன் வீட்டிற்கு செல்லும் போது மது அருந்தி கிணற்றில் விழுந்து நீரில் மூழ்கி இறந்தார் என்ற பொய்யான உண்மைகள் குறிப்பிட்டுள்ளார். அதேசமயம் பிரேத பரிசோதனை அறிக்கையில் நீரில் மூழ்கி இறந்ததற்கான அறிகுறிகள் எதுவும் காணப்படவில்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். விசாரணையின் போது பல்லியா மாவட்ட மருத்துவமனையின் மருத்துவர் வினோத் குமார் ராய் கூட இறந்தவரின் பிரேத பரிசோதனை அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டவர்களைக் காப்பாற்றுவதற்காக மரணத்திற்கான தவறான காரணத்தை (நீரில் மூழ்கி இறந்தார்) வேண்டுமென்றே குறிப்பிட்டுள்ளார்.

3.2 எனவே, அப்போதைய காவல் நிலைய அதிகாரி, காவல்துறை துணை ஆய்வாளர் ஜெய்நாத் யாதவ் மற்றும் மருத்துவர் வினோத் குமார் ராய் மீது வழக்குத் தொடர விசாரணை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

3.3 விசாரணையின் போது, அரசு தரப்பு 8 முக்கிய சாட்சிகளை விசாரித்தது; நீதிமன்ற சாட்சியாக சந்திரபால் திரிபாதி என்பவரின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அந்த எண்ணிக்கையிலான ஆவண ஆதாரங்களும் பதிவு செய்யப்பட்டன; சாட்சியங்களில், அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் – கிராம மக்கள் குறிப்பாக கூறியதாவது. அவர்கள் ஆதாரங்கள் / அறிக்கைகளை வழங்குவதற்கு முன்பு, குற்றம் சாட்டப்பட்டவர்களால் அச்சுறுத்தப்பட்டனர்; அது மட்டுமல்லாமல், குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது இந்திய தண்டனை சட்டம் 504 & 506 பிரிவுகளின் கீழ் அச்சுறுத்தல் விடுத்த குற்றங்களுக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது; அனைத்து சாட்சிகளும் – விசாரிக்கப்பட்ட கிராமவாசிகள் – குற்றம் சாட்டப்பட்டவர்களால் வழங்கப்பட்ட அச்சுறுத்தல்கள் குறித்து குறிப்பாக கூறியதாகவும், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக எந்த சாட்சியத்தையும் வழங்க வேண்டாம் என்றும் அவர்களிடம் கூறப்பட்டது; விசாரணையின் போது அரசுத் தரப்பும் தனது நோக்கத்தை நிரூபித்தது; சான்றுகளைப் பெற்று, பிரேத பரிசோதனை

அறிக்கையிலிருந்து குறிப்பாக இறந்தவரின் நுரையீரல் நெரிசலாக காணப்பட்டதைக் கண்டறிந்த போதிலும், நுரையீரலில் தண்ணீர் எதுவும் காணப்படவில்லை; மேற்கண்ட விஷயங்களை துணை ஆய்வாளர் ஜெய்நாத் யாதவ் அவரே பரிசீலிக்கவில்லை என்று கற்றறிந்த விசாரணை நீதிமன்றம் குறிப்பாக குறிப்பிட்டது, இது தொடர்பாக எந்த மருத்துவரிடமும் எந்த கருத்தையும் கேட்கவில்லை; விசாரணை அறிக்கையைத் தயாரித்து, இறந்தவரின் சகோதரர், மனைவி மற்றும் மகனிடம் விசாரிக்கவோ அல்லது அவர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்யவோ இல்லை என்பதை கற்றறிந்த விசாரணை நீதிமன்றமும் முன்பே கவனித்தது; அதன் பின்னர் 26.10.1995 அன்று இரவு 8 மணியளவில் இறந்தவருடன்(கிருபா சங்கர் சுக்லா) குற்றம் சாட்டப்பட்டவர்களுடன் கடைசியாக பார்த்த சாட்சியம், 28.10.1995 அன்று காலை 10.40 மணியளவில் கிருபா சங்கர் சுக்லா சடலம் கிணற்றில் கண்டெடுக்கப்பட்டது. கற்றறிந்த விசாரணை நீதிமன்றம் 08.02.2018 அன்று அளித்த தீர்ப்பில், இதில் குற்றம் சாட்டப்பட்ட விக்கிரம யாதவ், சுவாமிநாத் யாதவ், ஜிங்கூர் பார், சுரேந்திர குமார் பாண்டே மற்றும் உமேஷ் குமார் பாண்டே இந்திய தண்டனை சட்டம் பிரிவு 302/149, 201 உ/இ 120B இன் கீழ் குற்றவாளிகள் என்றும் இறந்தவரின் உடலை பிரேத பரிசோதனை செய்த அப்போதைய விசாரணை அதிகாரி ஜெய்நாத் யாதவ் மற்றும் மருத்துவர் வினோத் குமார் ராய் ஆகியோரும் குற்றவாளிகள் என தீர்ப்பளித்த விசாரணை நீதிமன்றம், குற்றங்களுக்கான இந்திய

தண்டனை சட்டம் 201, உ/இ 120 B மற்றும் 218 பிரிவுகளின் கீழ் கூறியது.

4. கற்றறிந்த விசாரணை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு மற்றும் உத்தரவு மீது மன உளைச்சலும் அதிருப்தியும் அடைந்த ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளி – சுவாமிநாத் யாதவ் குற்றவியல் மேல்முறையீட்டு எண் 1283/2018; சுரேந்திர குமார் பாண்டே குற்றவியல் மேல்முறையீட்டு எண் 1405 / 2018; குற்றவாளி ஜிங்கூர் பார் குற்றவியல் மேல்முறையீட்டு எண் 1496/2018 ; மற்றும் குற்றவாளி விக்ரமா யாதவ் உயர் நீதிமன்றத்தில் குற்றவியல் மேல்முறையீட்டு எண் 1398 / 2018 ஐ தாக்கல் செய்துள்ளனர்.

4.1 மேற்கூறப்பட்ட குற்றவியல் மேல்முறையீட்டு எண் 1283/2018 இல், குற்றம் சாட்டப்பட்ட சுவாமிநாத் யாதவ் தன்னை விடுவிக்கக் கோரி விண்ணப்ப எண். 1A/1/2018 ஆம் இலக்க பிணை விண்ணப்பமாக குற்றவியல் பல்வகை பிணை விண்ணப்பத்தை குற்றவியல் மேல்முறையீடு நிலுவையில் இருக்கும்போது முன்வைத்தார். 08.10.2018 தேதியிட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பு மற்றும் உத்தரவின் மூலம், உயர்நீதிமன்றம் மேற்படி பிணை மனுவை அனுமதித்துள்ளது மற்றும் சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தின் திருப்திக்கு ஏற்ப தலா இரண்டு பிணைகளுடன் தனிப்பட்ட

பத்திரத்தை சமர்ப்பித்து குற்றம் சாட்டப்பட்ட சுவாமிநாத் யாதவை பிணையில் விடுவிக்க உத்தரவிட்டுள்ளது.

4.2 சுவாமிநாத் யாதவ் வழக்கில் குற்றவியல் மேல்முறையீடு எண் 1283/2018 இல் விண்ணப்ப எண்.1A/1/2018 குற்றவியல் பல்வகை பிணை மனுவில் உயர்நீதிமன்றத்தால் 08.10.2018 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவு – சுவாமிநாத் யாதவ் ஒருங்கிணைப்பு அமர்வால் பிணையில் விடுவிக்கப்பட்டு மற்ற மூன்று மேல்முறையீடுகளிலும் பின்பற்றப்பட்டு மற்ற மூன்று இணை குற்றவாளிகளான சுரேந்திர குமார் பாண்டே, ஜிங்கூர் பார் மற்றும் விக்ரமா யாதவ் ஆகியோரும் விடுவிக்கப்பட்டனர்.

5. குற்றவியல் மேல்முறையீடு நிலுவையில் இருக்கும் போது குற்றம் சாட்டப்பட்டவர்களை பிணையில் விடுவித்து உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு குறித்து மன உளைச்சலும் அதிருப்தியும் அடைந்த மேல்முறையீட்டாளர் – பாதிக்கப்பட்ட – இறந்தவரின் மனைவி தற்போதைய குற்றவியல் மேல்முறையீட்டை விரும்பியுள்ளார்.

5.1 இந்த நிலையில், உயர்நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவர்களை பிணையில் விடுவிக்கும் போது, அவர்கள் 8 மாத சிறைத்தண்டனையை மட்டுமே அனுபவித்திருந்தனர் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

6. மேல்முறையீட்டாளருக்கு வி.கே.மிஸ்ரா, வழக்கறிஞர் முன்னிலையானார். குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பாக கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு. சந்தீப் நரேன் மற்றும் உதயதித்யா பானர்ஜி, குற்றவியல் மேல்முறையீட்டு எண்கள் 876 மற்றும் 877 / 2021 இல் முன்னிலையானார், உத்தரபிரதேச மாநிலத்தின் சார்பாக கற்றறிந்த வழக்கறிஞர் சிருஷ்டி சிங் முன்னிலையானார்.

6.1 மீதமுள்ள குற்றவாளிகள் சார்பு செய்தும் யாரும் முன்னிலையாகவில்லை. எனினும், குற்றவியல் மேல்முறையீட்டு எண் 876 மற்றும் 877/2021 குற்றவியல் எதிர்மேல்முறையீட்டாளர்கள் சார்பில் முன்னிலையான கற்றறிந்த சட்டத்தரணி அனைத்து வழக்குகளையும் உள்ளடக்கிய தங்கள் சமர்ப்பிப்புகளுடன் நீதிமன்றத்திற்கு நியாயமாக உதவியுள்ளனர்.

6.2 கற்றறிந்த வழக்கறிஞர் திரு வி.கே. மிஸ்ரா, குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தங்கள் மேல்முறையீடு மனு நிலுவையில் இருக்கும்போது இந்த வழக்கில் எதிர்மேல்முறையீட்டாளர்களை பிணையில் விடுதலை செய்து உயர்நீதிமன்றம் ஒரு மிகப்பெரிய தவறு செய்துள்ளது என்று ஆவேசமாக சமர்ப்பித்துள்ளார்.

6.3 இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 302/149, 201 உ/இ 120B ஆகியவற்றின் கீழ் குற்றம் சாட்டப்பட்டவர்களை குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்து அவர்களுக்கு ஆயுள் தண்டனை விதித்து விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது, ஆனால், குற்றம் சாட்டப்பட்டவர்களை பிணையில் விடுவிக்கும் போது, உயர்நீதிமன்றம் உண்மையை சரியாக பாராட்டி பரிசீலிக்கவில்லை என்று சமர்ப்பிக்கப்படுகிறது.

6.4 குற்றம் சாட்டப்பட்டவர்கள் இந்திய தண்டனைச் சட்டம் 302 பிரிவின் கீழ் மிகவும் கடுமையான குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டவுடன், அதன்பிறகு நிரபராதி என்ற அனுமானம் இருக்கக்கூடாது. எனவே, இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 302/149, 201 உ/இ 120B ஆகியவற்றின் கீழ் குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட மேல்முறையீடு நிலுவையில் உள்ள குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பிணை வழங்குவதில் உயர் நீதிமன்றம் மிகவும் மெதுவாக இருக்கும்.

6.5 மேலும், குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவிக்கும் போது உயர்நீதிமன்றம் எந்த காரணத்தையும் குறிப்பிடவில்லை என்று சமர்ப்பிக்கப்படுகிறது. மேல்முறையீடு நிலுவையில் உள்ள பிணை ஆரம்பத்தில் இருந்தே எந்த சூழ்நிலையில் உரிமை உள்ளது என்பதை உயர்நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது மேலும்

விசாரணையைத் தடம்புரளச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்று சமர்ப்பிக்கப்படுகிறது. விசாரணை நீதிமன்றமும் அப்போதைய விசாரணை அதிகாரியையும், பிரேத பரிசோதனை செய்த மருத்துவரையும் இந்திய தண்டனை சட்டம் பிரிவு 201 உ/இ 120B, மற்றும் 218 இன் கீழ் குற்றங்களுக்கான குற்றவாளி என்று தீர்ப்பளித்தது.

6.6 குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சாட்சியமளித்த அரசு தரப்பு சாட்சிகள் – கிராமவாசிகள் கூரியதை உயர் நீதிமன்றம் சரியாக மதிப்பிடவில்லை அல்லது கவனிக்கவில்லை அல்லது கருத்தில் கொள்ளவில்லை என்று சமர்ப்பிக்கப்படுகிறது. பிணையில் இருந்த குற்றம் சாட்டப்பட்டவர்கள் பலமுறை மிரட்டியும், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சாட்சியம் அளித்தால், மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று அவர்கள் கூரியதை உயர்நீதிமன்றமும் கவனிக்கத் தவறிவிட்டது என்று சமர்ப்பிக்கப்படுகிறது.

6.7 புகார்தாரர் தரப்புக்கும் மற்றவர்களுக்கும் அச்சுறுத்தல் விடுத்ததற்காக குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 504 மற்றும் 506 இன் கீழ் இந்த வழக்கு விசாரணையின் போது இரண்டு முதல் தகவல் அறிக்கைகள் கூட பதிவு செய்யப்பட்டன.

6.8 எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புகள் மற்றும் உத்தரவுகளில், மேல்முறையீடு நிலுவையில் உள்ள பிணையினை எதிர்த்து மாநில அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் ஆணையுறுதி ஆவணம் கூட உயர்நீதிமன்றம் குறிப்பிடவில்லை என்று சமர்ப்பிக்கப்படுகிறது.

6.9 எனவே, தீர்ப்பு மற்றும் தண்டனை உத்தரவுக்கு எதிராக குற்றவியல் மேல்முறையீடு நிலுவையில் உள்ள தனிமுறைப்பட்ட எதிர்மேல்முறையீட்டாளர்களை பிணையில் விடுவிக்கும் உயர்நீதிமன்றம், குற்றத்தின் தீவிரத்தன்மை மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு மற்றும் அவர்களின் முன்னோடி மற்றும் விசாரணையின் போதும் அதற்குப் பிறகும் சாட்சிகளை மிரட்டுவது போன்ற நடத்தை ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளவில்லை என்று சமர்ப்பிக்கப்படுகிறது.

6.10 மேற்கண்ட வாதங்களை முன்வைத்து, தற்போதைய மேல்முறையீட்டு மனுக்களை அனுமதிக்குமாறும், குற்றவியல் மேல்முறையீட்டு மனுக்கள் நிலுவையில் உள்ள நிலையில் குற்றம் சாட்டப்பட்டவர்களை பிணையில் விடுவித்து உயர்நீதிமன்றம் பிறப்பித்த எதிர்ப்புக்குள்ளான உத்தரவுகளை ரத்து செய்யுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

7. அரசு சார்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் மேல்முறையீட்டாளருக்கு முழு ஆதரவளித்துள்ளார். விசாரணையின் போது கூட குற்றம் சாட்டப்பட்டவரின் நோக்கம், முன்னோடி மற்றும் நடத்தை மற்றும் நியாயமான விசாரணையை சீர்குலைக்க ஆரம்பத்தில் இருந்தே அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்ட விதம் ஆகியவற்றை உயர் நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது அல்லது கருத்தில் கொள்ளத் தவறிவிட்டது என்று சமர்ப்பிக்கப்பட்டது.

7.1 மேல்முறையீடு நிலுவையில் இருப்பதால் குற்றம் சாட்டப்பட்டவர்களை பிணையில் விடுவிக்கும் போது உயர்நீதிமன்றம் குறிப்பிட்ட காரணங்கள் எதையும் குறிப்பிடவில்லை என்று சமர்ப்பிக்கப்படுகிறது. உயர்நீதிமன்றம் நடந்து கொண்ட விதம் மேல்முறையீடு நிலுவையில் இருப்பதால், பிணை மனுக்களை அனுமதித்து குற்றம் சாட்டப்பட்டவர்களை பிணையில் விடுவித்து உயர்நீதிமன்றம் பிறப்பித்த எதிர்ப்புக்குள்ளான உத்தரவுகளிலிருந்து, குற்றம் சாட்டப்பட்டவர் சார்பாகவும், விடுவிக்கும்போது பதிவு செய்யப்பட்ட கண்டுபிடிப்புகளுக்காகவும், சமர்ப்பிப்புகளை அடையாளம் காண்பது கடினம் என்று சமர்ப்பிக்கப்படுகிறது. அரசு சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட சமர்ப்பிப்புகள் கூட தொகுக்கப்படவில்லை அல்லது விவாதிக்கப்படவில்லை என்று சமர்ப்பிக்கப்படுகிறது.

7.2 இந்திய தண்டனை சட்டம் 143, 504 & 506 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றங்களுக்காக குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான இரண்டு வழக்குகளின் குற்றவியல் வரலாறு குற்ற எண்.158/1996 மற்றும் குற்ற எண்.23/1999 ஆகியவை இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 504 & 506 இன் கீழ் உயர்நீதிமன்றம் மிக இலகுவாக மேற்கண்ட வழக்குகள் சாட்சிகள் மற்றும் இங்கு மேல்முறையீட்டாளர் உட்பட இறந்தவரின் குடும்ப உறுப்பினர்களுக்கு குற்றம் சாட்டப்பட்டவர்களால் அச்சுறுத்தல் விடுக்கபட்டது என்பதை உயர் நீதிமன்றம் சீர்தூக்கிப்பார்த்திருக்க வேண்டும் என்று சமர்ப்பிக்கப்படுகிறது.

8. எதிர்மேல்முறையீட்டாளர்கள் – குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர்கள், இந்த வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளில், மேல்முறையீடு நிலுவையில் உள்ள நிலையில், குற்றம் சாட்டப்பட்டவர்களை பிணையில் விடுவித்ததில் உயர் நீதிமன்றம் எந்த தவறும் செய்யவில்லை என்று ஆணித்தரமாக சமர்ப்பித்தார்.

8.1 இது சூழ்நிலை சாட்சியத்தின் வழக்கு என்பதை ஒப்புக் கொண்டாலும், கிருபா சங்கர் சுக்லாவை கொலை செய்ததாக

அல்லது அவரது உடலை ஒரு கிணற்றில் வீசியதாக ஒரு சாட்சி கூட எதையும் பார்த்ததாகக் கூறவில்லை. பிரேத பரிசோதனை அறிக்கையில் கூட, மரணத்திற்கான காரணம் 'நீரில் மூழ்கி இறந்தார்' என்று காட்டப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மரணத்திற்கான வேறுபட்ட காரணத்தைக் காட்டும் வேறு எந்த மருத்துவ ஆதாரமும் இல்லை.

8.2 விசாரணையின் போது குற்றம் சாட்டப்பட்டவர்கள் பிணையில் இருந்தனர் என்றும், அதன் பிறகும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் எதிர்ப்புக்குள்ளான உத்தரவுகளின்படி பிணையில் உள்ளனர் என்றும் சமர்ப்பிக்கப்படுகிறது, அதன் பின்னர் அவர்கள் பிணையில் விடுவிப்பதன் மூலம் நீதிமன்றம் வழங்கிய சுதந்திரத்தை தவறாகப் பயன்படுத்தியதாக எதுவும் பதிவு செய்யப்படவில்லை. எனவே வழங்கிய பிணையை உயர்நீதிமன்றம் ரத்து செய்ய எந்த வழக்கும் இல்லை என்று சமர்ப்பிக்கப்படுகிறது.

8.3 மேற்கண்ட வாதங்களை முன்வைத்து, தற்போதைய மேல்முறையீட்டு மனுக்களை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

9. சம்பந்தப்பட்ட தரப்பினரின் கற்றறிந்த வழக்கறிஞர்களை நாங்கள் விரிவாக கேட்டோம். இந்திய தண்டனைச் சட்டம் 302/149,

201 மற்றும் 120 பி பிரிவுகளின் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களுக்கான தீர்ப்பு மற்றும் தண்டனை உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு நிலுவையில் உள்ள நிலையில் குற்றம் சாட்டப்பட்டவர்களை பிணையில் விடுவித்து உயர்நீதிமன்றம் பிறப்பித்த எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பு மற்றும் உத்தரவையும் நாங்கள் கவனமாக ஆராய்ந்தோம்

9.1 நிலுவையில் உள்ள மேல்முறையீட்டில், தீர்ப்பு மற்றும் உத்தரவின் எந்தப் பகுதி சமர்ப்பிப்புகள் என்று கூறலாம், எந்தப் பகுதியை கண்டுபிடிப்புகள் / காரணங்கள் என்று சொல்லலாம் என்பதில் முழுமையான தெளிவு இல்லை. மேல்முறையீடு நிலுவையில் இருப்பதால் பிணை வழங்குவதை எதிர்த்து அரசு வழக்கறிஞர் தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதங்களை கூட இது பிரதிபலிக்கவில்லை. மேல்முறையீடு நிலுவையில் உள்ள பிணைக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழக அரசு சார்பில் விரிவான எதிர்ஆணையுறுதி ஆவணம் தாக்கல் செய்யப்பட்டது கூட உயர் நீதிமன்றத்தால் குறிப்பிடப்படவில்லை. குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 389–ன் கீழ் உயர்நீதிமன்றம் மனுவை தள்ளுபடி செய்த விதம், மேல்முறையீடு நிலுவையில் உள்ள பிணை மனுவை தள்ளுபடி செய்த விதத்தை ஏற்க முடியாது. இந்த தீர்ப்பின் முக்கியத்துவத்தையும், தீர்ப்பின் நோக்கத்தையும், தீர்ப்பில் என்ன இருக்க வேண்டும் என்பதையும் என்பதை அறிவது அவசியமாகிறது..

9.2 முதலில், "தீர்ப்பு" என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். "தீர்ப்பு" என்பது வழக்கின் கதையைச் சொல்லும் நீதித்துறை கருத்து; வழக்கு எதைப் பற்றியது; நீதிமன்றம் வழக்கை எவ்வாறு தீர்க்கிறது. "தீர்ப்பு" என்பது ஒரு கேள்வி அல்லது கேள்விகளின் மீது நீதிமன்றத்தால் வழங்கப்படும் எந்தவொரு முடிவாகவும் வரையறுக்கப்படுகிறது அல்லது நீதிமன்றத்தில் ஒரு வழக்கை முறையாக நடத்துவதற்கு தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சினைக்கு சட்ட நடவடிக்கையில் ஒரு நீதிமன்றத்தின் முடிவு அல்லது தண்டனை என வரையறுக்கப்படுகிறது, இது ஒரு நீதிபதியின் பகுத்தறிவுடன் அவரை தனது முடிவுக்கு இட்டுச் செல்கிறது. "தீர்ப்பு" என்ற சொல் நீதித்துறை கருத்து அல்லது முடிவு என தளர்வாக பயன்படுத்தப்படுகிறது. குயின்ஸ்லாந்து உச்ச நீதிமன்றம் நீதியரசர் ரோஸ்லின் அட்கின்சன், அவரது எந்த ஒரு தீர்ப்புக்கும் நான்கு நோக்கங்கள் உள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்:

(I) நீதிபதிகளின் சொந்த எண்ணங்களை உச்சரிப்பது;

(ii) தரப்பினர்களுக்கு உங்கள் முடிவை விளக்குவது;

(iii) முடிவுக்கான காரணங்களை தெரிவிப்பது; மற்றும்

(iv) மேல்முறையீட்டு நீதிமன்றம் பரிசீலிப்பதற்கான காரணங்களை வழங்குதல்;

9.3 ஒரு முடிவு துல்லியமாக இருந்தால் மட்டும் போதாது, அது நியாயமானதாகவும், தர்க்கரீதியானதாகவும், எளிதில் புரிந்துகொள்ளக்கூடியதாகவும் இருக்க வேண்டும். நீதிபதியின் கருத்து தீர்ப்பு நீதியானது, நியாயமானது என்பதை நிரூபிக்கும் வகையில் எழுதப்பட வேண்டும். நீதிமன்றம் என்ன முடிவு எடுக்கிறது என்பதுபோலவே நீதிமன்றம் என்ன சொல்கிறது, அதை எப்படி சொல்கிறது என்பதும் முக்கியம்.

ஒவ்வொரு தீர்ப்பும் நான்கு அடிப்படை கூறுகளைக் கொண்டுள்ளது, அவை (i)பொருள் (தொடர்புடைய) உண்மைகளின் அறிக்கை, (ii) சட்ட சிக்கல்கள் அல்லது கேள்விகள், (iii) முடிவை எட்டுவதற்கான விவாதம் மற்றும் (iv) விகிதம் அல்லது முடிவான முடிவு. ஒரு தீர்ப்பு ஒத்திசைவானதாகவும், முறையாகவும், தர்க்கரீதியாகவும் ஒழுங்கமைக்கப்பட்டதாக இருக்க வேண்டும். சட்டக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஒரு தர்க்கரீதியான முடிவுக்கு உண்மையைக் கண்டறிய வாசகருக்கு அது உதவ வேண்டும். வாசிப்பு கலையை முழுமையாக புரிந்து கொள்ள ஒரு தீர்ப்பில் உள்ள முக்கிய கூறுகளை ஆராய்வது பொருத்தமானது. சட்டத்தின் பாதையில், நீதியரசர் ஹோம்ஸ் ஒரு நீதிபதியை இணங்க வைக்கும் உணர்ச்சியற்ற காரணிகளை வலியுறுத்தியுள்ளார். ஒரு தீர்ப்பு உண்மையின் கண்டுபிடிப்புகளை உருவாக்க வேண்டும், சட்டத்தின் தொடர்புடைய கோட்பாடுகள் என்ன என்பதை அது

தீர்மானிக்க வேண்டும், மேலும் அந்த சட்டக் கொள்கைகளை உண்மைகளுக்கு பயன்படுத்த வேண்டும். ஒரு தீர்ப்பின் முக்கிய கூறுகள்:

i) தலைப்பு

ii) வழக்கு எண் மற்றும் மேற்கோள்

iii) உண்மைகள்

iv) சிக்கல்கள்

v) இரு தரப்பினரின் வாதங்களின் சுருக்கம்

vi) சட்டத்தின் பயன்பாடு

vii) இறுதி தீர்ப்பு.

9.4 தீர்ப்பு நீதிபதியின் தனித்துவத்தை பிரதிபலிக்கிறது, எனவே அதை கவனமாக எழுதுவது இன்றியமையாதது. தீர்ப்பில் உள்ள நியாயம் புரிந்துகொள்ளக்கூடியதாகவும் தர்க்கரீதியானதாகவும் இருக்க வேண்டும். அது தெளிவும், துல்லியமும் குறிக்கோளாக இருக்க வேண்டும். அனைத்து முடிவுகளும் இருக்க வேண்டும். தீர்ப்பு முறையாக பதிவு செய்யப்பட்ட காரணங்களால் ஆதரிக்கப்படுகிறது. கண்டுபிடிப்புகள் மற்றும் வழிமுறைகள் துல்லியமாகவும் குறிப்பிட்டதாகவும் இருக்க வேண்டும். தீர்ப்புகளை எழுதுவது ஒரு கலை, இருப்பினும் இது சட்டத்தையும் தர்க்கத்தையும் திறமையாகப் பயன்படுத்துவதை உள்ளடக்கியது. நிலுவையில் உள்ள வழக்குகள்

மற்றும் நிலுவைத் தொகைகளால் நீதிபதிகளுக்கு அதிக சுமை ஏற்படக்கூடும் என்ற உண்மையை நாங்கள் அறிவோம். ஆனால் அதே நேரத்தில், தரத்தை ஒருபோதும் அளவுக்காக தியாகம் செய்ய முடியாது. ஒரு தீர்ப்பு துல்லியமான முறையில் இல்லை என்றால், அது ஒரு பரந்த தாக்கத்தை ஏற்படுத்தாது. தெளிவின்மையால் சில தீர்ப்புகள் இறுதியில் நிராகரிக்கப்படுகின்றன. எனவே, ஒரு தீர்ப்பு எழுதப்படும்போதெல்லாம், அது உண்மைகள் குறித்த தெளிவைக் கொண்டிருக்க வேண்டும்; எதிர்தரப்பினர்கள் சார்பில் முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்கள் மீதும்; விதிகள் பற்றிய விவாதம் மற்றும் அதன் பிறகு பகுத்தறிவு மற்றும் அதன் பிறகு இறுதி முடிவு மற்றும் கண்டுபிடிப்புகள் மற்றும் அதன் பிறகு செயல்பாட்டு பகுதி, உத்தரவு. வழங்கப்பட்ட இறுதி நிவாரணம் குறித்து தெளிவு இருக்க வேண்டும். இறுதி நிவாரணமாக தனக்கு உண்மையில் என்ன கிடைத்தது என்பதை வழக்கில் உள்ள ஒரு தரப்பினர் அறிந்திருக்க வேண்டும். மேற்கூறிய அம்சங்களை எழுதும் போது மனதில் கொள்ள வேண்டும். இந்த தீர்ப்பு மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் சுமையை குறைக்கும். உண்மைகள் பற்றிய தெளிவு இல்லாத பல தீர்ப்புகளை நாம் கண்டிருக்கிறோம். பல நேரங்களில் கற்றறிந்த நீதிபதி பகுத்தறிவு மற்றும் கண்டுபிடிப்புகள் மூலம் தீர்ப்பில் என்ன தெரிவிக்க விரும்புகிறார் என்பதைப் புரிந்துகொள்வது மிகவும் கடினம், இதன் காரணமாக, விஷயங்கள் புதிய பரிசீலனைக்கு அனுப்பப்பட வேண்டும். எனவே, தீர்ப்பு என்பது உண்மைகள் மற்றும் சட்டம் மற்றும் சமர்ப்பிப்புகள், கண்டுபிடிப்புகள், காரணங்கள் மற்றும்

வழங்கப்பட்ட இறுதி நிவாரணம் ஆகியவற்றில் தெளிவு இருக்க வேண்டும்.

10. உயர்நீதிமன்றம் பிறப்பித்த எதிர்ப்புக்குள்ளான உத்தரவை நாம் பரிசீலித்தால், மேலே குறிப்பிட்டபடி, சமர்ப்பிப்புகள், உத்தரவின் எந்தப் பகுதி சமர்ப்பிப்புகள், எந்தப் பகுதி கண்டுபிடிப்புகள் / காரணங்கள் என்பதில் முற்றிலும் தெளிவின்மை இருப்பதைக் காண்கிறோம். மேலே காணப்பட்டபடி, பிணை மனுக்களை எதிர்த்து அரசு தரப்பில் விரிவான எதிர் ஆணையுறுதி ஆவணம் தாக்கல் செய்யப்பட்ட போதிலும், அரசு வழக்கறிஞர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வாதங்கள் கூட கவனிக்கப்படவில்லை மற்றும் குறிப்பிடப்படவில்லை. ஒரு மேல்முறையீடு நிலுவையில் உள்ள பிணை மனுவை உயர்நீதிமன்றம் முடிவு செய்த விதத்தை நாங்கள் அங்கீகரிக்கவில்லை.

11. தகுதிப்பாட்டின் அடிப்படையிலும் கூட, மேல்முறையீடு நிலுவையில் உள்ள குற்றவாளிகளை பிணையில் விடுவித்து உயர்நீதிமன்றம் பிறப்பித்த எதிர்ப்புக்குள்ளான உத்தரவு ஏற்கத்தக்கதல்ல. கற்றறிந்த விசாரணை நீதிமன்றம், சாட்சியங்களைப் பரிசீலித்து, குற்றம் சாட்டப்பட்டவர்களை இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 302/149, 201 உ/இ 120B ஆகியவற்றின் கீழ் குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்துள்ளது என்ற

உண்மையை உயர்நீதிமன்றம் சிறிதும் சீர்தூக்கி மற்றும் கருத்தில் கொள்ளவில்லை. கற்றறிந்த விசாரணை நீதிமன்றத்தால் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டவுடன், அதன் பிறகு நிரபராதி என்று எந்த அனுமானமும் இருக்காது. எனவே, அந்த இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 302/149, 201 உ/இ 120B ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய கடுமையான குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு மேல்முறையீடு நிலுவையில் உள்ள குற்றவாளிகளுக்கு பிணை வழங்குவதில் உயர் நீதிமன்றம் மிகவும் மெதுவாக இருக்கும்.

11.1 ஆரம்பத்திலிருந்தே விசாரணையைத் தாமதப்படுத்த / தடம் புரளச் செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உயர்நீதிமன்றமும் கூட கீழ்க்கண்டவற்றை கவனிக்கத் தவறியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய தண்டனைச் சட்டம் 201 உ/இ 120 B மற்றும் 218 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றங்களுக்காக விசாரணை அதிகாரி மற்றும் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் ஆகியோரையும் விசாரணை நீதிமன்றம் குற்றவாளி என்று தீர்ப்பளித்தது.

11.2. உயர்நீதிமன்றமும் கீழ்க்கண்ட நடவடிக்கைகளைப் சீர்தூக்கவில்லை. குற்றம் சாட்டப்பட்டவர்களின் தரப்பு விசாரணை நிலுவையில் உள்ள போதும் மற்றும் விசாரணையின் போதும் கூட அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களைப் சீர்தூக்கி விசாரணை

நீதிமன்றம், குற்றம் சாட்டப்பட்டவர்கள் அரசுத் தரப்பு சாட்சிகள் மற்றும் கிராம மக்களை பலமுறை மிரட்டியதாகவும், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சாட்சி சொன்னால் அவர்கள் துன்பத்தை சந்திக்க நேரிடும் என்று மிரட்டியதாகவும் குறிப்பிட்டது குறித்து உயர்நீதிமன்றமும் பெரிதாக பரிசீலிக்கவில்லை. புகார்தாரர் தரப்புக்கும் மற்றவர்களுக்கும் அச்சுறுத்தல் விடுத்ததற்காக குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 504 மற்றும் 506 இன் கீழ் குற்றங்களுக்காக விசாரணையின் போது இரண்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. இந்திய தண்டனைச் சட்டம் 504 மற்றும் 506 பிரிவுகளின் கீழ் உள்ள குற்றங்களுக்கான இரண்டு வழக்குகள் எளிமையானவை, "இந்த இரண்டு வழக்குகளும் குற்றம் சாட்டப்பட்டவர்களின் குற்றவியல் வரலாற்றை உருவாக்காது". என்று உயர்நீதிமன்றம் மிகவும் சாதாரணமாகக் கூறியுள்ளது. மேலும் புகார்தாரர் தரப்புக்கும் மற்ற தரப்புக்கும் மிரட்டல் விடுப்பது இந்திய தண்டனைச் சட்டம் 504 மற்றும் 506 பிரிவுகளின் கீழ் மிகவும் கடுமையான குற்றங்கள் என்று கூறலாம். எனவே, மேற்கூறிய நடத்தையை உயர்நீதிமன்றம் மிகவும் சாதாரணமாக எடுத்துக் கொண்டிருக்கக்கூடாது.

11.3. குற்றத்தின் தீவிரத்தன்மை மற்றும் மீதான குற்றச்சாட்டின் தீவிரம், குற்றம் சாட்டப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் முன்னோடிகள், விசாரணையின் போதும் அதற்குப்

பிறகும் சாட்சிகளிடம் மிரட்டல் விடுப்பதன் மூலம் நடத்தை போன்றவற்றை உயர்நீதிமன்றமும் கருத்தில் கொள்ளவில்லை. விசாரணை நீதிமன்றம் விதித்த ஆயுள் தண்டனையை எதிர்த்து மேல்முறையீடு நிலுவையில் உள்ள நிலையில் குற்றம் சாட்டப்பட்டவர்களை உயர்நீதிமன்றம் பிணையில் விடுவித்தபோது, அவர்களுக்கு எதிராக 8 மாத சிறைத்தண்டனை மட்டுமே அனுபவித்துள்ளனர் என்பதை உயர் நீதிமன்றம் கவனத்தில் கொண்டிருக்க வேண்டும்.

12. மேற்கூறிய உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 302/149, 201 உ/இ 120B ஆகியவற்றின் கீழ் குற்றங்களுக்கான தீர்ப்பு மற்றும் தண்டனை உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு நிலுவையில் உள்ள நிலையில், குற்றம் சாட்டப்பட்டவர்களை பிணையில் விடுவித்ததில் உயர்நீதிமன்றம் பெரும் தவறு செய்துள்ளது.

13. மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டும், மேற்கூறிய காரணங்களுக்காகவும், தற்போதைய மேல்முறையீடுகள் அனுமதிக்கபடுகின்றன. 08.10.2018 மற்றும் 06.12.2018 ஆம் திகதிகளான குற்றவியல் மேல்முறையீட்டு எண் 1283/2018 இல்

குற்றவியல் பல்வகை பிணை மனு எண். 1A/1/2018, குற்றவியல் மேல்முறையீட்டு எண் 1405/2018 இல் குற்றவியல் பல்வகை பிணை விண்ணப்ப எண். 1A/1/2018, குற்றவியல் மேல்முறையீடு எண் 1398/2018 குற்றவியல் பல்வகை பிணை மனு எண்.1A/1/2018, மேல்முறையீடு எண் 1496/2018 இல் குற்றவியல் பல்வகை பிணை விண்ணப்ப எண் 1A/1/2018 முறையே, வழங்கப்பட்ட சர்ச்சைக்குரிய தீர்ப்பு (கள்) மற்றும் கட்டளைகள் (கள்)குற்றவியல் மேல்முறையீடு நிலுவையில் உள்ள குற்றவாளிகளான சுவாமிநாத் யாதவ், சுரேந்திர குமார் பாண்டே, ஜிங்கூர் பார் மற்றும் விக்ரமா யாதவ் ஆகியோரை இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 302/149, 201 உ/இ 120B கீழ் விசாரணை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு மற்றும் தண்டனை உத்தரவுக்கு எதிராக, சுவாமிநாத் யாதவ், சுரேந்திர குமார் பாண்டே, ஜிங்கூர் பார் மற்றும் விக்ரமா யாதவ் ஆகிய தனிமுறைப்பட்ட எதிர்மேல்முறையீடுகளை பிணையில் விடுதலை செய்தது ரத்து செய்யப்படுகின்றன. சுவாமிநாத் யாதவ், சுரேந்திர குமார் பாண்டே, ஜிங்கூர் பார் மற்றும் விக்ரம யாதவ் ஆகிய தனிமுறைப்பட்ட எதிர்மேல்முறையீட்டாளர்கள் உடனடியாக சரணடைய உத்தரவிடப்படுகிறார்கள். கற்றறிந்த விசாரணை நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தண்டனை, தவறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக பிடியாணை பிறப்பித்து நடவடிக்கை எடுக்குமாறு விசாரணை நீதிமன்றத்திற்கு உத்தரவிடப்படுகிறது.

அவர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும். இந்த உத்தரவின் நகலை சம்பந்தப்பட்ட விசாரணை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். தற்போதைய மேல்முறையீடுகள் மேற்கூறிய விதிமுறைகளில் அனுமதிக்கப்படுகின்றன. தங்கள் சொந்த தகுதிப்பாடுகளின் அடிப்படையில், சட்டத்திற்கு இணங்க, யாராலும் பாதிக்கப்படாமல் நிலுவையில் உள்ள மேல்முறையீடுகளை உயர் நீதிமன்றம் முடிவு செய்யும்.

மேல்முறையீடுகள் அனுமதிக்கப்பட்டன.

பொறுப்புத் துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."